**செய்தி வெளியீடு எண்: 181** **நாள்: 16.03.2013**

# <u>தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்</u>

# <u>செய்தி வெளியீடு</u>

சென்னை, **வியாசர்பாடி பகுதியிலுள்ள மூர்த்திங்கர் தெருவில்** வாரியத்திற்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து, குடிசைகள் அமைத்து மிகவும் சுகாதாரமற்ற நிலையில் வசித்து வரும் மக்களுக்காக அதே இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட குடிசை மாற்று வாரியம் உத்தேசித்து அப்பகுதி வாழ் மக்களிடம் கலந்து பேசி அவர்களுடைய சம்மதத்துடன் புதியதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட தயார் நிலையிலுள்ளது.

மேற்கண்ட திட்டப்பகுதியிலுள்ள மூர்த்திங்கர் தெரு குடிசைவாழ் மக்கள் பொதுநலச் சங்க உறுப்பினர்களுடன் மேலாண்மை இயக்குநர் **24.12.2011** அன்று விவாதித்து **13**வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட முடிவு செய்ததற்கு சங்க உறுப்பினர்களும் சம்மதம் தெரிவித்தனர்.

தற்பொழுது **ரூ.92 கோடி செலவில் மேற்கண்ட இடத்தில் எட்டு அடுக்குகள் கொண்ட 960 மாடிக் குடியிருப்புகளை** கட்ட வாரியம் மற்றும் அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது அமையவிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகவும் நவீன தொழில்நுட்பத்துடன் (Prefab) கூடிய ஒவ்வொரு குடியிருப்பும் **சுமார் 400 சதுர அடி பரபப்பளவு கொண்ட (இதுநாள் வரை 270–300 சதுர அடி பரப்பளவு மட்டுமே கட்டப்பட்டு வந்தது)** அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய திட்டமாகும். **<u>இப்பகுதியில் லிப்ட் வசதி, குடியிருப்பிலேயே கழிவறை மற்றும் குளியலறை, நியாய விலைக் கடை அங்கன்வாடி, தெருவிளக்குகள், சாலை வசதிகள், பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகள் செய்து தரப்படும்</u>.** இத் தொழில்நுட்பம் (Prefab) குடிசை மாற்று வாரியத்தில் முதன்முறையாக இப்பகுதியில் செயல்படுத்தப்பட உள்ளது. இக் குடியிருப்புகள் அனைத்தும் ஒரு வருட காலத்தில் கட்டி முடிக்கப்படும்.

இத்திட்டப்பகுதியில் அமையவிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, கட்டட ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதியிலுள்ள குடிசைவாழ் மக்களை கட்டடப் பணிகள் முடியும் வரை வேறு இடத்திற்கு தற்காலிகமாக குடியேறுமாறு அறிவுறுத்தப்பட்டது. ஏற்கனவே இப்பகுதியில் குடியிருக்கும் 730 குடும்பங்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டு அவர்களுள் சுமார் 120 குடும்பங்கள் தங்கள் இடத்தை காலி செய்து வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர். மேலும் மக்கள் அனைவரும் படிப்படியாக தாங்களாகவே காலி செய்து வேறு இடங்களுக்கு குடிபெயர செல்வதாக தெரிவித்தனர். ஆனால் தற்பொழுது குடிசையைக் காலி செய்ய காலதாமதம் செய்கிறார்கள். இது ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**குடிசை மாற்று வாரியம் மக்கள் நலனை கருத்தில் கொண்டு அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இதுபோன்ற அடுக்குமாடிக் குடியிருப்புகள் சென்னையிலும் மற்றும் ஏனைய நகரங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, பணிகள் உடனடியாக தொடங்கப்பட உள்ளதால் ஒதுக்கீடு ஆணை பெற்றவர்கள் ஒருவார காலத்திற்குள் தங்கள் குடிசைகளை அகற்றி வேறு இடத்திற்கு செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையேல் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9